# பொதுப்பணித்துறை

# நீர்வள ஆதாரத்துறை

# திட்டச் சாதனை

# 2018–2019

©

தமிழ்நாடு அரசு

2019

# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

## 1.0. பொது

நீர்வள ஆதாரத்தை திறம்பட திட்டமிடுதல், மேம்படுத்துதல், பங்கீடு செய்தல் மற்றும் உகந்த பயன்பாட்டிற்கு நிர்வகிப்பதே நீர்வள மேலாண்மையாகும். சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் சமூக பொருளாதார பிரிவுகளுக்கு இடையே நீருக்கான தேவை அதிகரித்து வருவதால் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை மற்றும் உறுதித்தன்மையில் கவனம் தேவைப்படுகிறது. நீர் தேவையும் அதன் தொடர்பான பிரச்சனையை தீர்க்கும் நடவடிக்கையும் முழு பொருளாதாரத்திற்கும் சவாலாக உள்ளது. இந்த சவால்களை திறம்பட எதிர்கொள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலமாக விவசாய சமூகத்திற்கு தேவையான நீர் சரியான நேரத்தில் கிடைக்கவும் தேவையான உணவு உற்பத்தி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

நதிகளை இணைக்கும் திட்டங்கள், வெள்ள மேலாண்மை திட்டம், கடலோர பாதுகாப்பு பணிகள், நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் மேலாண்மை போன்ற திட்டங்கள் இந்த துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.0. 2018–2019–ஆம் ஆண்டுக்கான திட்ட செயல்பாடுகள்


2018–2019 ஆம் ஆண்டின் நிதிச் சாதனை, நிறைவேற்றப்பட்ட / முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு :


**(ரூ. கோடியில்)**


| திட்டத்தின் தலைப்பு | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2018–2019 | இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு 2018–2019 | செலவினம் |
|---|---|---|---|
| **I திட்டம்** | | | |
| மாநில நிதித் திட்டங்கள் | 843.14 | 712.88 | 458.32 |
| தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் | 661.58 | 517.80 | 388.61 |
| நபார்டு நிதியுதவி திட்டங்கள் | 698.44 | 409.69 | 343.83 |
| தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் | 10.00 | 0.04 | 0.005 |

| திட்டத்தின் தலைப்பு | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2018–2019 | இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு 2018–2019 | செலவினம் |
|---|---|---|---|
| அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 168.86 | 116.60 | 99.97 |
| மாநில திட்ட மேலாண்மை அலகு (ஊதியம்) | 4.54 | 4.49 | 4.07 |
| 13 வது நிதிக்குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் | 0.00 | 2.31 | 2.09 |
| மத்திய மாநில அரசு பங்களிப்புத் திட்டங்கள் (AIBP & RRR) | 8.68 | 36.42 | 29.10 |
| ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி திட்டம் (ADB) | 437.41 | 230.74 | 200.73 |
| மாநில நதிகள் இணைப்புத் திட்டம் | 100.88 | 95.90 | 62.34 |
| **மொத்தம் (திட்டப் பணிகள்)** | **2933.53** | **2126.87** | **1589.065** |
| பன்முக குழுமம் (பணியமைப்பு ) | 5.12 | 4.29 | 2.68 |
| **மொத்தம் (திட்டப் பணிகள் மற்றும் பணியமைப்பு)** | **2938.65** | **2131.16** | **1591.75** |
| **II திட்டம் சாராதது** | | | |
| முறை சார்ந்த பாசன அமைப்பு பராமரிப்பு | 157.69 | 182.72 | 176.68 |
| முறை சாரா பாசன அமைப்பு பராமரிப்பு | 42.19 | 46.41 | 46.20 |
| மாநகர குடிநீர் வழங்குதல் – பராமரிப்பு | 2.54 | 2.20 | 2.12 |
| இதர பராமரிப்பு | 0.95 | 1.41 | 1.40 |
| மணல் குவாரி | 15.30 | 78.54 | 63.44 |
| **மொத்தம் (திட்டம் சாராப் பணிகள்)** | **218.67** | **311.28** | **289.84** |
| **மொத்தம் (திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகள்)** | **3157.32** | **2442.44** | **1881.59** |

## கோரிக்கை எண்.40–இல் ஒப்பளிக்கப்பட்ட நிதி இனங்கள்






## 3.0. நடைபெறும் முக்கியத் திட்டங்கள்

### 3.1. குடிமராமத்து – பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர்நிலைகளை புனரமைத்தல்.

2017–2018–ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் 328.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1511 குடிமராமத்து பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டதில், 1408 பணிகள் நிறைவடைந்துள்ளன. 46 பணிகள் நடைபெற்று வருகின்றன, 57 பணிகள் துவக்கப்பட உள்ளன.

மாவட்டம் வாரியாக முடிவுற்ற பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

| வ. எண். | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | முடிவுற்ற பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 19 | 3.74 | 19 |
| 2 | கோயம்புத்தூர் | 34 | 4.94 | 34 |
| 3 | கட லூர் | 55 | 11.50 | 55 |
| 4 | தருமபுரி | 10 | 3.27 | 10 |
| 5 | திண்டுக்கல் | 21 | 4.45 | 21 |
| 6 | ஈரோடு | 53 | 8.99 | 53 |
| 7 | காஞ்சிபுரம் | 31 | 6.88 | 31 |
| 8 | கன்னியாகுமரி | 39 | 5.83 | - |
| 9 | கரூர் | 22 | 3.57 | 22 |
| 10 | மதுரை | 128 | 31.09 | 116 |
| 11 | நாகப்பட்டினம் | 51 | 7.98 | 51 |
| 12 | நாமக்கல் | 23 | 7.37 | 22 |
| 13 | பெரம்பலூர் | 15 | 1.75 | 15 |
| 14 | புதுக்கோட்டை | 29 | 9.22 | 24 |
| 15 | இராமநாதபுரம் | 64 | 31.20 | 61 |
| 16 | சேலம் | 31 | 9.80 | 30 |
| 17 | சிவகங்கை | 104 | 24.67 | 95 |
| 18 | தஞ்சாவூர் | 70 | 11.09 | 66 |
| 19 | தேனி | 5 | 1.92 | 5 |
| 20 | திருப்பூர் | 159 | 14.96 | 149 |
| 21 | திருவள்ளூர் | 66 | 14.62 | 61 |
| 22 | திருவாரூர் | 41 | 5.10 | 41 |
| 23 | தூத்துக்குடி | 22 | 9.53 | 19 |
| 24 | திருநெல்வேலி | 144 | 34.14 | 137 |
| 25 | திருவண்ணாமலை | 34 | 8.50 | 33 |
| 26 | திருச்சி | 65 | 9.68 | 62 |
| 27 | வே லூர் | 62 | 11.68 | 62 |
| 28 | விழுப்புரம் | 55 | 12.50 | 54 |
| 29 | விருதுநகர் | 59 | 18.98 | 58 |
| | **மொத்தம்** | **1511** | **328.95** | **1406** |

## 3.2. அத்திக்கடவு – அவிநாசி திட்டம்

அத்திக்கடவு–அவிநாசி நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டத்தை, மாநில அரசு நிதியில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் (Design, Build, Operate and Transfer-DBOT) செயல்படுத்திட ரூ.1652.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அத்திக்கடவு–அவிநாசி பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமானது, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

பவானி ஆற்றில் காலிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்திலிருந்து 1.5 டி.எம்.சி அடி உபரி நீரை இறவை முறையில் (Pumping) நிலத்தடியில் குழாய் பதிப்பின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள், 971 கசிவுநீர் குட்டைகளில் நீர் நிரப்பப்படுவதன் மூலம் இப்பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு சுமார் 24,468 ஏக்கர் விளை நிலங்கள் மறைமுக பாசன வசதிபெறும்.

பணிகளின் தற்போதைய விவரம் பின்வருமாறு :

1. பிரதானக் குழாய் பதிப்பதற்கான மட்ட அளவைப் பணிகள் 105.33 கி.மீ. வரை நிறைவடைந்துள்ளன.
2. கிளைக் குழாய் பதிப்பதற்கான மட்ட அளவைப் பணிகள் 913.90 கி.மீ. வரை நிறைவடைந்துள்ளன.
3. 1,044 எண்ணிக்கையிலான ஏரிகள் மற்றும் குளங்களில் மட்ட அளவைப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
4. சுற்றுப்புறச்சூழல் தடையின்மை சான்று பெறுவதற்குரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு, சென்னையிலுள்ள மாநில சுற்றுப்புறச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.
5. வடிவமைப்பு கருத்துரு (conceptual design) திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்தின் (M/s. WAPCOS Limited) பரிசீலனையில் உள்ளது.

## 3.3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பு மேலணை நீரொழுங்கியை பலப்படுத்தும் பணி

கடந்த ஆண்டு (2018) ஏற்பட்ட வெள்ளத்தினால் மேலணை பாதிக்கப்பட்டது. வெள்ள காலங்களில் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும், பாசன நீரை தொடர்ந்து வழங்கவும், புதிய அணை கட்டும் வரை சேதமடைந்த மேலணையினை பலப்படுத்தும் பணிகளுக்கு ரூ.38.85 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சேதமடைந்த பகுதியின் மேல்புறம் 220 மீ நீளத்திலான காப்பணை அமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவுற்றுள்ளது. சேதமடைந்த பகுதியின் கீழ்புறம் மொத்தம் 645 மீட்டர் நீளத்திற்கு கசிவில்லா சுவர் அமைக்கும் பணியில் இதுநாள் வரை 120 மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 3.4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொள்ளிடம் ஆற்றின் மேலணையின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியின் குறுக்கே புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி

முக்கொம்பு மேலணை 1836–ஆம் ஆண்டு சர் ஆர்தர் தாமஸ் காட்டன் அவர்களால் கட்டப்பட்டது. கடந்த ஆண்டு (22.08.2018) ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மேலணைக்கு மாற்றாக புதிய நீரொழுங்கி ரூ.387.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அடித்தளம் பைல் பவுண்டேசன் (Pile Foundation) முறையில் அமைக்கப்பட்டு வருகிறது.

## 3.5. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே தலை மதகுகளுடன் கூடிய கதவணை அமைத்தல்

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே நெடுகை 74/3 மைல் தொலைவில் தலை மதகுகளுடன் கூடிய கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.428.00 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்தொகையானது, ரூ.396.414 கோடி மதிப்பிலான கட்டுமானப் பணிகள், ரூ.31.345 கோடி மதிப்பிலான நிலம் கையகப்படுத்தும் பணிகள் மற்றும் ரூ.24.00 இலட்சம் மதிப்பிலான நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

ஒரு வருடத்திற்கான உபயோகப்படுத்தக்கூடிய கொள்ளளவானது 4 நிரப்புதலின் அடிப்படையில் 1.336 டி.எம்.சி. அடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும். இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் நீர் வீராணம் ஏரிக்கு கொண்டு செல்லப்பட்டு சென்னை மாநகர குடிநீர் தேவைக்கு பயன்படும். இத்திட்டத்தில் அமைக்கப்படும் பாலம் கொள்ளிடம் ஆற்றின் கதவணையின் இருபுறங்களில் உள்ள கிராமங்களுக்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தும். இத்திட்டத்தில் காப்பணை (Coffer Dam), கதவணைக்கான அடித்தளம் (Raft Foundation), அணுகுசாலை அமைக்கும் பணிகள், வடக்கு இராஜன் கால்வாயில் கரைகளை பலப்படுத்தும் பணிகள், தெற்கு இராஜன் கால்வாய் மற்றும் நரிமுடுக்கு வடிகாலினை இணைக்கும் இருவழிச்சாலை பாலப்பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

## 4.0. வண்டல் மண் வழங்குதல்

மட்பாண்டம் வனைதல், வீட்டு உபயோகம் மற்றும் வேளாண் தேவைகளுக்காக ஏரிகளின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள நீர்நிலைகளிலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் முன்அனுமதி பெற்று இலவசமாக எடுத்துச் செல்ல அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. (தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள் 1959–ல் விதி 12(2) மற்றும் 12 (2A) (a)–க்கு 27.04.2017–இல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

இது வரை, தமிழகத்தில், 72.867 மி.கன மீட்டர் வண்டல் மண் 6,49,059 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதாரத்துறையின் மூலம், 16.272 மி.கன மீட்டர் வண்டல் மண் 1,18,215 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 5.0. புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குதல்

### 5.1. புதிய நீர்த்தேக்கங்கள் / கதவணைகள்

#### நடைபெற்று வரும் பணிகள்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமத்தின் அருகே, மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.124.20 கோடி

மதிப்பீட்டில் 4,194 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் நடைபெற்று வருகிறது. 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை கிராமங்களின் அருகே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.380.00 கோடி மதிப்பீட்டில் 696 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் நடைபெற்று வருகிறது. 75 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 5.2. புதிய அணைக்கட்டுகள் / நீரொழுங்கிகள்

### நிறைவடைந்துள்ள பணிகள்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், வெங்காஞ்சேரி கிராமத்தின் அருகே செய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 810 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பன்தட்டை வட்டம், அய்யன்பேரையூர் மற்றும் கீரனூர் ஏரிகளுக்கு நீர் வழங்க வி.களத்தூர் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 471 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், குறுந்தம்பட்டு கிராமத்தில் எஸ்.ஆர்.பட்டணம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 814 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் (கலசப்பாக்கம்) வட்டம், காரைப்பூண்டி மற்றும் கொரல்பாக்கம் ஏரிகளுக்கு நீர் வழங்க ஆனைவாடி கிராமத்தின் அருகே செய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 588 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், காலப்பெருமாள்பட்டி ஏரிக்கு நீர் வழங்க ஆவுடையாபுரம் கிராமத்தில் கௌசிகாநதியின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 292 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தில் (துர்காஸ் ஆஞ்சநேயர் கோவிலின் பின்புறத்தில்) கிட்டியணை உப்பனாற்றின் குறுக்கே தொலைகல் 7.100 கி.மீ–இல் கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி 48,129 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.9.77 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 25 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் வட்டம், பில்லுவலசை கிராமத்தில் ஆலத்தூர் மற்றும் வேங்காகுடி ஏரிகளுக்கு நீர் வழங்க கொழுவனாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 667 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், மல்லனூர் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்க விருசுழியார் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 549.06 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ1.896 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 35 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மேலப்பார்த்திபனூர் கிராமத்தில் கீழச்சிவன்குளம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்க பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 388.39 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 52 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பெரியானைக்குளம் கிராமத்தில் பெரியானைக்குளம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்க பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 377.75 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 15 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருவுடையார்பட்டி கிராமத்தில் பெருமி ஏரி மற்றும் பிற ஏரிகளுக்கு நீர் வழங்க தேசிய வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் (NADP) கீழ் 215 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையிலும், 379 ஏக்கர் பாசன இடைவெளி உறுதி செய்யப்படும் வகையிலும், பாலாற்றின் குறுக்கே அணைக்கட்டு

அமைக்கும் பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 93 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் மேல்நகர் கண்மாய்க்கு நீர் வழங்க நாகநதியாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 757 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.3.28 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி மற்றும் அசநெல்லிக்குப்பம் கிராமங்களின் அருகில் உள்ள சயனவரம் ஏரிக்கு நீர் வழங்க கல்லாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 2340 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 35 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம் தளவானூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் எனதிரிமங்கலம் கிராமங்களின் இடையே பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி 2114 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.25.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 15 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 5.3. புதிய ஏரிகள் / குளங்கள்

### <u>நடைபெற்று வரும் பணிகள்</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமம் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைக்கும் பணி 800 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.17.38 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 91 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கோம்பேரிபட்டி கிராமத்தில் உள்ள மம்மானியூர் குக்கிராமத்தில் கன்னிமார் ஓடையின் குறுக்கே கசிவுநீர் குட்டை அமைக்கும் பணி 193.47 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கணக்கம்பாளையம் கிராமத்தின் அருகே காட்டோடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணி 500 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.64.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 5.4. புதிய கால்வாய்கள்/வழங்கு வாய்க்கால்கள்/ நீர்வழிந்தோடி

**நிறைவடைந்துள்ள பணிகள்**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், நிலையூர் நீட்டிப்பு வாய்க்காலிலிருந்து தொட்டியப்பட்டி ஏரி மற்றும் நெடுமதுரை ஏரிகளுக்கு பிரிவு வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 906 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திடியூர் கிராமத்திலிருந்து பச்சையாறு வழிந்தோடிக்குக் கீழ்ப்புறம் சாலையின் வலது பக்க தடுப்புச் சுவருக்கு இணையாக மழை நீர் மற்றும் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் உள்ள சாயல்குடி மற்றும் இதர கண்மாய்களுக்கும் நீர் வழங்கும் பொருட்டு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர் கால்வாய் புதிதாக அமைக்கும் பணி 4,241 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 18 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கல்லிடைக்குறிச்சி நகரத்தின் வடிகால் நீரினை திருப்புவதற்காக கன்னடியன் கால்வாயின் குறுக்கே தொலைகல் 2,046 மீட்டரில் ஒரு நீர்வழிந்தோடி அமைக்கும் பணி ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 10 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள உப்பாறு கால்வாயை பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்துடன் இணைக்கும் பணி 6,060 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 5.5. புதிய தடுப்பணைகள் / படுகை அணைகள் / தளமட்டச்சுவர்கள்/ நிலத்தடி தடுப்புச்சுவர்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள விளாங்குடி கிராமம், விளாங்குடி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 40.80 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வேலக்கவுண்டம்பட்டி அருகே சீவல்சரகு கிராமத்தில் குடகனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 187 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருபாக்ஷி கிராமத்தில் நங்காஞ்சியாற்றின் குறுக்கே புல எண்.605–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 260 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கோணாம்பட்டி கிராமத்தில் இராவுத்தர் தோட்டம் அருகில், மருதா நதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.89 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 124 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், முல்லையாறு கிராமத்தின் அருகில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.59 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 104 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆண்டான்கோவில் கிராமத்தில் பெரியார் நகரின் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.15.16 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,621 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில் புல எண்.109–ல் வாவல்தோப்பு அருகில் பெரியபள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.74 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 10 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்புவனம் பேரூராட்சி அருகில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1329 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், காளாப்பூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 319 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பொய்யுண்டார்குடிக்காடு கிராமத்தில் வேதபுரி ஆற்றின் குறுக்கே தொலைகல் 35.00 கி.மீ.–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 494 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வண்ணான்கொள்ளைபட்டி கிராமத்தில் பனங்குளம் மிகைநீர் வடிகாலின் குறுக்கே தொலைகல் 2.00 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.51 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 210 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தலையாமங்கலம் கிராமத்தின் அருகே தலையாமங்கலம் ஏரி வடிகாலின் குறுக்கே தொலைகல் 1.60 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.49 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 218 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போடிநாயக்கனூர் கிராமத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே புல எண்.683/2–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 650 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பூதிபுரம் கிராமம், மாமரத்துவயல் அருகில் வாளையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.72 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 149 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பூதிபுரம் கிராமம், நாட்டாமை தோப்பின் அருகில் வாளையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.66 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 102 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தேவாரம் கிராமத்தில் பிள்ளையார் ஊற்று ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.36 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 138 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமத்தில் முக்காணி அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி

ரூ.25.75 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 990 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், ஆவுடையம்மாள்புரம் கிராமத்தில் உப்போடை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.86 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 231 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் அருந்தவபிராட்டி அணைக்கட்டின் கீழ்புறம் அனுமாநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 187 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் சித்தாறு ஆறு கலக்கும் இடம் அருகே அனுமாநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 125 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், இராஜாக்கள்மங்கலம் கிராமம், இராஜாக்கள்மங்கலம் அணைக்கட்டின் கீழ்புறம் நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 288 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பெரிய குமாரபாளையம் கிராமம், உப்பாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 249 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர் கிராமம், நல்லாற்றின் குறுக்கே புல எண்.271–ல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 59 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சின்னமுதூர் கிராமம், புல எண்.453–இல் பெரியகரை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 639 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புதுக்குப்பம் மற்றும் குதிரைப்பள்ளம் கிராமங்களுக்கிடையே கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி

ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 988 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஆட்றம்பாக்கம் கிராமத்தின் அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 356 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மாசிகம் கிராமத்தின் அருகே மலட்டாற்றின் குறுக்கே நிலத்தடி தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 378 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நல்லி கிராமம் (சுவாமி நத்தம் கிராமத்தின் அருகில்) உப்போடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 149 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மானூர் கிராமத்தில் புல எண்.1–இல் கோரையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 60 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 90 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமத்தில் பெரியபள்ளத்தின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 111 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், கெம்மாரம்பாளையம் கிராமத்தில் பெரியபள்ளத்தின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 111 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், திருமலையம்பாளையம் கிராமத்தில் தெப்பக்குளத்துப்பாறை அருகில் புல எண்.364–இல் குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 122.05 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும்

வகையில் ரூ.0.87 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கூடலூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 153 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.15.77 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 35 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பரவளூர் கிராமத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 160 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.10.05 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 20 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சித்தர்கள்நத்தம் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தொலைகல் 35.05 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி 290.40 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.12.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 75 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், மாரம்பாடி கிராமத்தில் வேலம்பட்டி குக்கிராமத்தின் அருகில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 741.30 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 75 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், குன்னவராயன் கோட்டை கிராமத்தில் உச்சப்பட்டி அருகில் மஞ்சளாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 264.39 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 20 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கணவாய்பட்டி கிராமத்தில் மஞ்சளாற்றின் குறுக்கே தொலைகல் 14000 மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி 215 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 10 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஈசூர் மற்றும் வள்ளிபுரம் கிராமங்களின் அருகில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 341.44 ஏக்கர் பாசன

நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.30.95 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம், இரயுமன்துறை அருகில் குழித்துறையாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.15.37 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பெண்டரஹள்ளி கிராமத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 236.40 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.9.24 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 45 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டி அருகே பாரூர் கிராமத்தில் புல எண்.464–இல் பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 508 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.8.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், லாடபுரம் கிராமத்தில் கோனேரி / பொக்குனியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 752.21 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மானமடை கிராமத்தில் பூனைக்குத்திவாரி வடிகாலின் குறுக்கே தொலைகல் 2.50 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி 250 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.0.46 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், காக்குடி கிராமத்தின் அருகே குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 709.47 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 20 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சாயல்குடி கிராமத்தின் அருகே குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 490.22 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.3.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், லத்துவாடி கிராமத்தில் சுவேதா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி **43.88** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**2.43** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **10** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், குடமலை கிராமத்தில் காளியம்மன் கோவில் மேற்புறத்தில் சுவேதா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி **65.63** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**1.88** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **15** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பனைமடல் கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி **503** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**1.37** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **10** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், லக்கம்பட்டி கிராமத்தில் புல எண்கள்.**232** மற்றும் **305**–இல் சின்னதண்டா அருகில் பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி **22.50** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**0.95** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **50** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுந்தரபெருமாள் கோவில் கிராமத்தில் அரசலாற்றின் குறுக்கே மைல்கல் **52/3–4**–இல் தளமட்ட சுவர் அமைக்கும் பணி **1185** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**5.20** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **40** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், பவுண்டிரிகபுரம் கிராமத்தில் கீர்த்திமன்னாற்றின் குறுக்கே மைல் **62/7**–இல் தளமட்ட சுவர் அமைக்கும் பணி **614** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**3.90** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **75** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வெண்டையன்பட்டி கிராமத்தில் புல எண்.**28/88**–இல் அய்யனாபுரம் வாரியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி **629** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.**2.61** கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **18** விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தொண்டராம்பட்டு மற்றும் வெள்ளூர் கிராமங்களில் பட்டுவனாச்சி வடிகாலின் குறுக்கே தொலைகல் 6.500 கி.மீ மற்றும் 11.000 கி.மீ–இல் 2 தடுப்பணைகள் அமைக்கும் பணி 335 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.0.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், அருமலை கிராமத்தின் அருகே அருமலை வடிகாலின் குறுக்கே தொலைகல் 1.25 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி 204 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.0.49 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 50 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தோப்புவிடுதி கிராமத்தில் உள்ள வண்ணான்வாரி வடிகாலின் குறுக்கே தொலைகல் 2.100 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கும் பணி 280 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.0.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 86 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோவில் குளத்திற்கு நீர் கொண்டு செல்லும் வகையில் பட்டரைப்பெரும்புதூர் கிராமத்தில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக மேற்படி கோவில் குளத்திலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. 40 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நடுப்படுகை கிராமத்தில் ஓடம்போகியார் ஆற்றின் குறுக்கே மைல் 74/4–இல் தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூ.2.47 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், செருகுடி கிராமத்தில் கீர்த்திமன்னாறு ஆற்றின் குறுக்கே மைல் 72/7–இல் செருகுடி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு தளமட்ட சுவர் அமைக்கும் பணி 322 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் மற்றும் பெரியசாமிபுரம் கிராமங்களின் அருகே வேம்பாற்றின் குறுக்கே 2 தடுப்பணைகள் அமைக்கும் பணி

573 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.17.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், வல்லநாடு கிராமத்தில் அகரம் குடியிருப்பின் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை அமைக்கும் பணி 2347 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.12.29 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பள்ளக்குறிச்சி கிராமத்தில், கருமேனியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 195 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 50 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமத்தில் உப்போடை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 564 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 50 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், புளியங்குடி கிராமத்தில் அச்சந்திகுளம் வாய்க்கால் பிரியும் இடத்தில் கோட்டமலையாற்றின் குறுக்கே படுகை அணை அமைக்கும் பணி 299 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், அகரம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே நெட்டூர் அணைக்கட்டின் கீழ்ப்புறத்தில் தடுப்பணை அமைக்கும் பணி 184 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக் குறிச்சி கிராமத்தில் மருதன்குளம் பிரியுமிடத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே படுகை அணை அமைக்கும் பணி 225 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 95 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமத்தில் நிசப நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 204 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும்

வகையில் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 5 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமந்தகடவு கிராமத்தில் புல எண். 135–இல் உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 126 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தெள்ளூர் கிராமத்தின் அருகே செய்யாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 179 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.5.64 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 27 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பரமனந்தல் கிராமத்தில் கொட்டாவூர் அருகில் செய்யாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 71 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 40 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கருங்காலி கிராமத்தின் அருகே அகரம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 428 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 55 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சின்னாரம்பட்டி கிராமத்தின் அருகே பாம்பாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி 62 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 25 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், எடுத்தவாய்நத்தம் கிராமத்தில் புல எண்.87–ல் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்பு அமைக்கும் பணி 125 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 45 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

**5.6. புதிய பிரிவணை அமைத்தல்**

**<u>நடைபெற்று வரும் பணிகள்</u>**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நாரணபுரம் கிராமத்தில் கூடலூர் குளத்திற்கு கால்வாய் பிரியும் இடத்தில் கலிங்கலாற்றின் குறுக்கே பிரிவணை அமைக்கும் பணி 1228 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

**5.7. புதிய சாலைகள் / பாலங்கள்**

**<u>நிறைவடைந்துள்ள பணிகள்</u>**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆவணி பேரூர் கிழக்கு கிராமத்தில் புல எண்.293–இல் சரபங்கா நதியின் குறுக்கே பாலம் கட்டும் பணி ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**<u>நடைபெற்று வரும் பணிகள்</u>**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஸ்ரீபுரந்தான் கிராமத்தில் தொலைகல் 10.70 கி.மீ–இல் பொன்னார் பிரதான வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூ.0.67 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமத்தின் அருகே தென்கரை வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால், புதிய கட்டளை உயர்மட்ட கால்வாய் மற்றும் வடகரை வாய்க்காலின் குறுக்கே இருவழிப்பாலம் அமைக்கும் பணி ரூ.6.86 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**5.8. புதிய கட்டடங்கள்**

**<u>நடைபெற்று வரும் பணிகள்</u>**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூரில் தெற்கு வெள்ளாறு வடிநில உபகோட்டத்தில் பிரிவு அலுவலகங்களுடன் கூடிய உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், திருவாடனையில் கீழ் வைகை வடிநில உபகோட்டத்தில் 2 பிரிவு அலுவலகங்களுடன் கூடிய உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.36 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 6.0. பாசன கட்டமைப்புகள் மற்றும் பாசன அமைப்புகளைப் புனரமைத்தல்

### 6.1. அணைகளைப் புனரமைத்தல் – அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)

உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் ரூ.**745.49** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது**.** இத்திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் **69** அணைகளில் ரூ**.469.94** கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2018–2019–**ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற மற்றும் நடைபெற்று வரும் பணிகளின் விவரம் பின்வருமாறு:

**நிறைவடைந்துள்ள பணிகள்**

அரியலூர் மாவட்டத்தில் சித்தமல்லி அணை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீழ் நீராறு, சோலையாறு, ஆழியாறு மற்றும் மேல் நீராறு அணைகள், கடலூர் மாவட்டத்தில் வெலிங்டன் அணை மற்றும் வீராணம் ஏரி, தருமபுரி மாவட்டத்தில் தும்பலஹள்ளி, கேசரிகுலிஹல்லா, நாகவதி, தொப்பையாறு, வாணியாறு மற்றும் சின்னாறு அணைகள், திண்டுக்கல் மாவட்டத்தில் மருதாநதி, குடகனாறு, குதிரையாறு மற்றும் பாலாறு பொருந்தலாறு அணைகள், ஈரோடு மாவட்டத்தில் வரட்டுப்பள்ளம், குண்டேரிப்பள்ளம் மற்றும் பவானிசாகர் அணைகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு, சித்தாறு–I, சித்தாறு–II மற்றும் பெருஞ்சாணி அணைகள், கரூர் மாவட்டத்தில் நொய்யல் ஆத்துப்பாளையம் அணை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூளகிரிசின்னாறு, கிருஷ்ணகிரி, பாம்பாறு மற்றும் கெலவரப்பள்ளி அணைகள், சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஆனைமடுவு மற்றும் கரியகோவில் அணைகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ் அணைக்கட்டு அணை, தேனி மாவட்டத்தில் மஞ்சளாறு, சோத்துப்பாறை, சண்முகாநதி மற்றும் வைகை அணைகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொன்னனியாறு மற்றும் உப்பாறு அணைகள், திருநெல்வேலி மாவட்டத்தில் அடவிநயினார் கோவில், வடக்குப்பச்சையாறு, கொடுமுடியாறு, நம்பியாறு, கருப்பாநதி, கடானா மற்றும் இராமநதி அணைகள், திருப்பூர் மாவட்டத்தில் திருமூர்த்தி, அமராவதி மற்றும் உப்பாறு (திருப்பூர்) அணைகள், திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகள், திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் அணை, வேலூர் மாவட்டத்தில் மோர்தானா அணை, விழுப்புரம் மாவட்டத்தில் கோமுகி, வீடூர் மற்றும் மணிமுக்தாநதி அணைகள், விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் பெரியாறு, கோல்வார்பட்டி, வெம்பக்கோட்டை, பிளவக்கல் கோவிலாறு, குல்லூர்சந்தை மற்றும் ஆனைக்குட்டம்

அணைகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரி, பாலக்காடு (கேரளா) மாவட்டத்தில் பெருவாரிப்பள்ளம், பரம்பிக்குளம் மற்றும் தூணக்கடவு அணைகள், ஆகிய 67 அணைகள் / ஏரிகளில் ரூ.342.10 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள், மின் பணிகள், அடைப்பான்களை இயக்கும் அமைப்புகள் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பேச்சிப்பாறை அணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.61.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மணிமுத்தாறு அணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.17.97 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 6.2. அணைக்கட்டுகள்/நீரொழுங்கிகளை புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள பார்த்திபனூர் நீரொழுங்கியினை புனரமைத்து நவீனப்படுத்தும் பணி ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 67,853 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சேலம் மாவட்டம், சரபங்கா உப வடிநிலத்தில் உள்ள 6 அணைக்கட்டுகள் மற்றும் 10 ஏரிகளை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் ரூ.14.62 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 1,614 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

தருமபுரி மாவட்டம், நல்லாம்பள்ளி வட்டம், பாளையம் புதூர் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோவில் பள்ளம் அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் காவிரி, வெண்ணாறு, கொள்ளிடம் மற்றும் மணற்போக்கி நீரொழுங்கிகளில் சேதமடைந்த அடைப்புப்பலகைகளை புனரமைக்கும் பணி ரூ.8.53 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 98 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 6.3 ஏரிகள் புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம், பென்னகரம் வட்டத்தில் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் கோவில்பள்ளம், சிந்தல்பாடிபள்ளம், மரவத்திபள்ளம், அச்சாரிகிணத்துப்பள்ளம், கொடுவாய்ப்பள்ளம், பள்ளிப்பட்டி மற்றும் பாப்பாரப்பட்டி பெரிய ஏரி ஆகிய 7 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 956.94 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் பெருங்களத்தூர், மல்லிகைப்பட்டு, பள்ளி, வெள்ளியநல்லூர் வீரம்மாள் பளவேரி, வின்னமங்கலம், பெரியகோயில், வடஏலப்பாக்கம் மற்றும் நாவல்பாக்கம் ஆகிய 8 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 1,207.26 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மணியங்குறிச்சி கிராமத்தில் உள்ள மணியங்குறிச்சி ஏரியினை நிரந்தரமாக சீரமைக்கும் பணி ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 141 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் உள்ள பருத்திப்பட்டு ஏரியின் சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் பணிகள் ரூ.28.16 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், வேலூர், அணைகட்டு மற்றும் ஆற்காடு வட்டங்களில் ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் மேல்மணவூர் பெரிய ஏரி, தெல்லூர், கம்மாசமுத்திரம், மேல்நாயக்கன்பாளையம், வணக்கம்பாடி மற்றும் மோசூர் ஆகிய 6 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 1,126.13 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், அருப்புக்கோட்டை, கரியப்பட்டி, சாத்தூர் மற்றும் சிவகாசி வட்டங்களில் ரூ.10.11 கோடி மதிப்பீட்டில் பட்டம்புதூர், சென்னல்குடி,

பாலவநத்தம் புது ஏரி, பாலவநத்தம் பழைய ஏரி, மன்னார்கோட்டை, கெப்பிலங்கம்பட்டி, காளப்பெருமாள்பட்டி, சத்திரரெட்டியாபட்டி, வி.குமாரலிங்கபுரம், மத்தியசேனை, புல்லலக்கோட்டை, காளையார்குறிச்சி, இஞ்சார்செங்குளம், மேலமடை, வடமலைக்குறிச்சி மற்றும் கோல்வார்பட்டி ஆகிய 16 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 3,751.73 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பீர்க்கன்கரணை ஏரியின் சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகள் ரூ.9.81 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 30 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், வண்டியூர் கண்மாயினை புனரமைக்கும் பணி ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் 124.93 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும். 28 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் திருவாடனை வட்டங்களில் உள்ள 9 முன்னாள் ஜமீன் கண்மாய்களை புனரமைத்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 474.38 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும். 40 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சரபங்கா உப வடிநில படுகையில் 7 ஏரிகள் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 7 நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்பு பணிகள் ரூ.9.65 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 1177.28 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும். 15 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

தேனி மாவட்டம் மற்றும் வட்டத்தின் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கும் பொருட்டு அல்லிநகரம் கிராமம், மீறுசமுத்திரம் கண்மாயினை ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளைப் பலப்படுத்தி அதன் கொள்ளளவை அதிகரிக்கும் பணி ரூ.4.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 35 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், வடுவூர் அக்ரஹாரம் கிராமம், வடுவூர் ஏரியில் தூர்வாருதல் மற்றும் மன்னார்குடி வட்டம், மூவர்கோட்டை கிராமம், சித்தேரி ஏரிக்கு வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிகள் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 1,672 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும். 30 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், சோழவரம், நேமம், போரூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளில் நீர்த்தேக்க கொள்ளளவை உயர்த்துதல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரியின் கூடுதல் கொள்ளளவினை மீளப்பெறுவதற்கான பணிகள் ரூ.130.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 95 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் வேலூர் வட்டங்களில் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் அரியூர் சித்தேரி, அரியூர் பெரிய ஏரி, நாகலேரி, பள்ளிப்பட்டு, அடியூர் மற்றும் பளம்பாக்கம் ஆகிய 6 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் வட்டங்களில் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் செட்டிக்குறிச்சி பெரிய ஏரி, சேதுராஜபுரம், திருவிருந்தாள்புரம், சீனியாபுரம், தாதப்பெருமாள்குளம், வாடி மற்றும் ஆகிய 6 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 6.4. கால்வாய்கள் மற்றும் வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல் நிறைவடைந்துள்ள பணிகள்

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காலிங்கராயன் வாய்க்கால் தொலைகல் 9/7 முதல் 12/5–361 மைல் வரை புனரமைக்கும் பணி ரூ.36.75 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 6,373 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கவுடாநதி ஆற்றினை சௌதர்பட்டி அணைக்கட்டிலிருந்து திரளி அணைக்கட்டு வரை கௌண்ட நதி ஆற்றை

புனரமைக்கும் பணி ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,194 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் மானங்கொண்டனாறு வடிகாலினை புனரமைக்கும் பணி ரூ.2.94 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 10,830 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், மேட்டூர் கிழக்குக்கரை கால்வாயின் தொலைகல் 45.303 கி.மீ முதல் 58.000 கி.மீ வரை புனரமைக்கும் பணி ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 7481 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்குக்கரை கால்வாயின் தொலைகல் 7.283 கி.மீ முதல் 13.92 கி.மீ வரை புனரமைக்கும் பணி ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 14,672 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கண்டலேறு பூண்டி கால்வாயின் (தொலைகல் 10.685 கி.மீ., 17.425 கி.மீ., 17.521 கி.மீ., 18.650 கி.மீ. மற்றும் 19.220 கி.மீ.) சரிவடைந்த பகுதிகளை பலப்படுத்தும் பணி ரூ.2.67 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில், ஊட்டுக் கால்வாயின் மிகவும் சிதிலமடைந்த பகுதிகளான தொலைகல் 0 கி.மீ. முதல் 14.175 கி.மீ. வரை (தொலைகல் 800 மீ, தொலைகல் 1985 மீ, தொலைகல் 2829 மீ, தொலைகல் 4217 மீ, தொலைகல் 13794 மீ மற்றும் தொலைகல் 13800 மீ) ஆகியவற்றை பலப்படுத்தும் பணி ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் கண்டலேறு பூண்டி கால்வாயின் தொலைகல் 0 கி.மீ. – தொலைகல் 25 கி.மீ., முடிய மற்றும் ஊட்டுக் கால்வாயில் தொலைகல் 0 மீ – தொலைகல் 21400 மீ., முடிய சிறப்பு சீரமைப்பு பணிகள் ரூ.0.83 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் கண்டலேறு பூண்டி கால்வாயின் சிதலமடைந்த அடைப்பான்களின் தலைமதகு, வழிந்தோடி, கால்வாய் நீரொழுங்கி மற்றும் ஆரணியாறு

அணைக்கட்டின் மணற்போக்கி உள்ளிட்ட பகுதிகளை புதுப்பித்து புனரமைக்கும் பணிகள் ரூ.0.39 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், கோலியனூர் வாய்க்காலினை மறுகட்டமைப்பு செய்து புனரமைக்கும் பணி ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,349 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

மதுரை மாவட்டம், வைகை ஆற்றின் தொலைகல் 38.00 கி.மீ முதல் 70.00 கி.மீ வரை (சித்தணை அணைக்கட்டு முதல் காமராஜர் பாலம் வரை) உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

பாலக்காடு மாவட்டம் (கேரள மாநிலம்), சித்தூர் வட்டம், சர்கார்பதி நீர்மின்நிலைய தொலைகல் 4,000 அடியில் ஐங்கர செத்தைக்கூள தடுப்புச் சட்டங்களை புனரமைத்தல் மற்றும் தொலைகல் 4,000 அடி முதல் தூணக்கடவு அணையின் சர்கார்பதி நீர்மின்நிலைய குகைப் பகுதி வரை எல்லைச் சுவர் கட்டும் பணிகள் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 85 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

சேலம் மாவட்டம், எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டங்களில் உள்ள மேட்டூர் கிழக்கு கரை கால்வாயை தொலைகல் 14,000 மீட்டர் முதல் 31,400 மீட்டர் வரை புனரமைக்கும் பணி ரூ.48.86 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 85 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 9,039 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடவாறு விரிவாக்க வாய்க்கால் தொலைகல் 0.00 முதல் 4.10 கி.மீ. வரை நவீனப்படுத்தும் பணி ரூ.9.74 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 21,170.6 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள, திருநெல்வேலி வாய்க்காலை மேற்பூச்சு செய்து அதன் மதகுகளை மேம்படுத்தும் பணி ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 78 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 2,000 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நகராட்சிக்குட்பட்ட எல்லைகளில் தாமிரபரணி ஆற்றில் 10 கி.மீ நீளத்திற்கு விலகம் முதல் நாரணம்மாள்புரம் பாலம் வரை வளர்ந்துள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை பிரதானக் கால்வாய் மைல்கல் 0.000 கி.மீ முதல் 16.600 கி.மீ வரையிலும் அதன் பகிர்மானக் கால்வாய்களிலும் விடுபட்ட பகுதிகளைப் புனரமைக்கும் பணி ரூ.4.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 48 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 58,318 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

## 6.5. தடுப்பணைகளை புனரமைத்தல்

**நடைபெற்று வரும் பணிகள்**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், திருக்கண்டலம் கிராமத்தில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே உள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தடுப்பணையினை மறுசீரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.18.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 15 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 6.6. சாலைகள் / பாலங்கள் புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், பெரியகளந்தை முதல் வடசித்தூர் சாலையில், வடசித்தூர் கிளை வாய்க்கால் சரகம் 9.010 கி.மீ–இல் உள்ள குழாய் பாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றி அமைக்கும் பணி ரூ.0.27 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 149 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பரமன்கேணி கிராமம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள ஒருவழிப் பாதை பாலத்தை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கிளியூர் கிராமத்தில் கல்லணைக் கால்வாயின் குறுக்கே தொலைகல் 4.150 கி.மீட்டரில் உள்ள பாலத்தை மறுகட்டுமானம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சேத்துமடையிலிருந்து ஆனைப்பாடி செல்லும் மலைப்பாதையை 21/400 கி.மீ. முதல் 34/400 கி.மீ. வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 98 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 6.7. பூங்காக்கள் மற்றும் கட்டடங்கள் மேம்படுத்துதல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலூர் கிராமத்தில் உள்ள வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு செல்லும் அணுகு சாலையை புனரமைத்து சீரமைக்கும் பணி ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

இடுக்கி மாவட்டம் (கேரளா), தேக்கடியில் அமைந்துள்ள ஓய்வுக்கூடம்–II-னை சீரமைக்கும் பணி 0.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

வேலூர் மாவட்டம் ஆண்டியப்பனூர் ஓடை அணையில் புல்வெளி அமைப்பு வேலைகள், அமரும் பலகைகள், செயற்கை நீரூற்று அமைப்புகள், குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், மேற்கட்டி மண்டபம் அமைத்தல் (Gazebo), சிலைகள் அமைப்பு மற்றும் இதர பணிகள்ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

# 7.0. வெள்ளத் தடுப்புப் பணிகள்

**நிறைவடைந்துள்ள பணி**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் மணவாய்க்காலின் நீர் கடத்தும் திறனை அதிகரித்தல் மற்றும் பழைய

கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பாதிப்புகளை தடுத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில், பாசிமுத்தான் ஓடை, தில்லையம்மன் ஓடை, ஓமகுளம் வடிகால், கான்சாகிப் வாய்க்கால் மற்றும் முத்தையா பிள்ளை உபரிகளில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், வீசூர் கிராமத்திலிருந்து தேவனாம்பட்டினம் கிராமம் வரை கெடிலம் ஆற்றினை ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து வலுவூட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில், வீசூர் மற்றும் பெரிய காட்டுப்பாளையம் ஓடைகளை ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து வலுவூட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், கடலூர் மற்றும் பண்ருட்டி வட்டங்களிலுள்ள வேலப்பாக்கம் வாய்க்காலை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம், அடையாறு மற்றும் அதன் துணை ஆறுகளை ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் ஆற்றுப் பகுதிகளை தரப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

காஞ்சிபுரம் நகர எல்லைக்குள் வெள்ளத்தில் சேதம் அடைந்த வேகவதி ஆற்றினை ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் உப வடிநிலங்களில், மிக அதிகமாக பாதிப்பு அடையும் பகுதிகளில், நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகளுக்கு 100.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 16 பணிகளில், கீழ்க்காணும் 3 பணிகள் ரூ.12.10 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன:–

1. திருவள்ளூர் மாவட்டம், கூவம் உபவடிநில பகுதியில் திருநின்றவூர் ஏரியில் உபரி நீர் கலிங்கலை, நீரொழுங்கியாக மாற்றம் செய்யும் பணி ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

2. அடையாறு உபவடிநிலத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், ஆதனூர் ஏரியின் இரண்டவாது கலிங்கலில் இருந்து வெள்ள பாதிப்பு பகுதிகளில் நெடுகை 0 மீ முதல் நெடுகை 670 மீ வரை மிகைநீர் வழியில் மூடுதளத்துடன் வடிகால் அமைக்கும் பணி ரூ.8.5 கோடி மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

3. கோவளம் உபவடிநிலத்தில் நாராயணபுரம், பெரும்பாக்கம், ஒட்டியப்பாக்கம், திருவாஞ்சேரி மற்றும் அடையார் உபவடிநிலத்தில் நந்திவரம், நன்மங்கலம், புதுத்தாம்பரம், இரும்புலிச்சேரி, ஆகிய 8 ஏரிகளுக்கு வெள்ள நீரொழுங்கிகள் அமைத்தல் மற்றும் வெள்ளநீரை வெளியேற்றும் கூடுதல் அமைப்புகளை ஏற்படுத்தும் பணி மற்றும் சிட்லப்பாக்கம் தாங்கலை தூர்வாரும் பணி ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

அடையாறு உபவடிநிலத்தில் பாப்பான் கால்வாயினை அகலப்படுத்தி, 700 மீட்டருக்கு மூடுதளத்துடன் வடிகால் அமைக்கும் பணி ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

அடையாறு உபவடிநிலத்தில் ஒற்றை நீர் போக்கியுடன் கூடிய மூடுதளத்துடன் வடிகால் மற்றும் நீர் உந்து வேகத்தினை அதிகரிக்கும் வகையில் கீழ்நிலைத் தொட்டி அமைக்கும் பணி ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

அடையாறு உபவடிநிலத்தில் ஒரத்தூர் ஏரியிலிருந்து மணிமங்கலம் ஏரிக்கு மதகுடன் கூடிய கால்வாய் அமைக்கும் பணி ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

அடையாறு உபவடிநிலத்தில் ஆரம்பாக்கம் ஏரி மற்றும் ஒரத்தூர் ஏரிகளுக்கு இடையே கரைகளை இணைத்து புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

அடையாறு உபவடிநிலத்தில் மணிமங்கலம் ஏரியினை ஆழப்படுத்தி கொள்ளளவினை உயர்த்துதல் மற்றும் கரை எதிர்வாய் பகுதிகளை சீரமைக்கும் பணி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கோவளம் உபவடிநிலத்தில் சிட்லப்பாக்கம் ஏரி முதல் செம்பாக்கம் ஏரி வரை ஒற்றை நீர்போக்கியுடன் கூடிய மூடுதள வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிட்லப்பாக்கம் தாங்கலை தூர்வாரும் பணி ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கோவளம் உபவடிநிலத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம் நாராயணபுரம் ஏரி முதல் பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதி வரை வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் மூடுதளத்துடன் பெருவடிகால் அமைக்கும் பணி மற்றும் சிட்லப்பாக்கம் தாங்கலை தூர்வாரும் பணி ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

அடையாறு உபவடிநிலத்தில் தாங்கல் மற்றும் நந்திவரம் மிகைநீர் வழியினை ஊரப்பாக்கம் ஏரியுடன் இணைத்து ஏரியினை ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கோவளம் உபவடிநிலத்தில் நன்மங்கலம் ஏரி மற்றும் அடையாறு உபவடிநிலத்தில் ஆதனூர், கூடுவாஞ்சேரி மற்றும் ஊரப்பாக்கம் ஏரிகளை ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை அதிகரித்தல் போன்ற பணிகள் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கொசஸ்தலையாறு உபவடிநிலத்தில் கார்கில் நகர் பகுதியில் கொசஸ்தலையாறு ஆற்றில் புதியதாக அமைக்கப்பட்ட வெள்ளக் கரையில் திருகு அடைப்பான்களுடன் கூடிய 12 சிறுபாலங்கள் அமைக்கும் பணி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கொசஸ்தலையாறு உபவடிநிலத்தில் ஆமுல்லைவாயில் கிராமம், செங்குன்றம் ஏரியில் மிகைநீர் வழியில் 8 இடங்களில் 1 கி.மீ நீளத்திற்கு தாங்கு சுவர் அமைத்தல் மற்றும் விடுபட்ட இணைப்பை கால்வாயால் இணைத்தல் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கூவம் உபவடிநிலத்தில் திருநின்றவூர் ஏரியில் முன்பக்க கரை அமைத்து திருகு அடைப்பான்களுடன் கூடிய உள்வாங்கிகள் அமைத்தல் மற்றும் குடியிருப்பு பகுதிளில் வெள்ள நீர் வடிகால் அமைத்து கூவம் ஆற்றுடன் இணைக்கும் பணிகள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கூவம் உபவடிநிலத்தில் வடக்கு பக்கிங்காம் கால்வாயினை எண்ணூார் கழிமுகம் முதல் ஆரணியாறு முகத்துவாரம் வரை நெடுகை 20.00 கி.மீ முதல் 31.20 கி.மீ வரை தூர்வாருதல் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8.0. கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், கீழ்வைப்பாறில் ரூ.11.75 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி மாநில நிதியின் கீழ் நிறைவடைந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடுபுதூரில் ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி நபார்டு நிதியுதவியின் கீழ் நிறைவடைந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இரவிபுத்தன்துறை கிராமத்தில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கடலரிப்பு தடுப்புச்சுவர் புனரமைக்கும் பணி நபார்டு நிதியுதவியின் கீழ் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

கன்னியாகுமரி மாவட்டம், வட்டக் கோட்டை முதல் நீரோடி வரை ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் கடலரிப்பு ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எண்ணூார் முதல் எர்ணாவூர் குப்பம் வரை ரூ. 38.39 கோடி மதிப்பீட்டில் 9 தொடர் தூண்டில் வளைவுகள் அமைக்கும் (மைல் கல் 19/000 முதல் 15/200 கி.மீ. வரை) பணி நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பூத்துறையில் ரூ.14.69 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், வள்ளவிளைத்துறையில் சமுதாயக்கூடம் மற்றும் தேவாலயம் முன்பாகவும் மற்றும் சின்னத்துறை ஆகிய இடங்களில் உள்ள வீடுகளை பாதுகாக்கும் பொருட்டு ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் கடலரிப்புத் தடுப்புச்சுவரினை மறுசீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 9.0. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்

### வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஏரிகள் மற்றும் பாசன வாய்க்கால்கள் புனரமைப்பு பணிகள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில், 59 ஏரி அமைப்புகளில் உள்ள 57 ஏரிகள் மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால்களில் புனரமைப்பு பணிகளை 16 சிப்பங்களாக உலகவங்கியின் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தில், உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள ரூ.43.63 கோடிக்கு தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

மாவட்டம் வாரியாக சிப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | மாவட்டம் | சிப்பங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | முடிவுற்ற பணிகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 3 | 474.20 | 3 | 474.20 |
| 2 | திருவண்ணா மலை | 1 | 90.82 | 1 | 90.82 |
| 3 | கடலூர் | 1 | 197.69 | 1 | 197.69 |
| 4 | காஞ்சிபுரம் | 11 | 3600.53 | 1 | 318.60 |
| | **மொத்தம்** | **16** | **4363.24** | **6** | **1081.31** |

**முதற்கட்ட பணிகள்**

22 மாவட்டங்களிலுள்ள 18 உபவடி நிலங்களில், 1,325 ஏரிகள், 107 அணைக்கட்டுகள் போன்றவற்றை புனரமைக்கவும் மற்றும் 45 செயற்கைமுறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும் 204 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு மொத்தம் ரூ743.57 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1.86 கோடி மதிப்பீட்டிலான 18 சிப்பங்களாக தொகுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை தொடர்பான பணிகளும் உள்ளடங்கும். இதுவரை 36 சிப்பங்கள் முடிவடைந்துள்ளன. மாவட்ட வாரியான சிப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ எண் | மாவட்டம் | சிப்பங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | முடிவுற்ற பணிகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 3 | 363.00 | – | – |
| 2. | கிருஷ்ணகிரி | 7 | 2287.17 | 2 | 730.50 |
| 3. | தருமபுரி | 2 | 816.83 | 2 | 816.83 |
| 4. | கடலூர் | 14 | 7157.68 | – | – |
| 5. | விழுப்புரம் | 2 | 1006.03 | 1 | 460.00 |
| 6. | காஞ்சிபுரம் | 31 | 8638.72 | – | – |
| 7. | திருச்சிராப்பள்ளி | 9 | 3584.25 | 1 | 76.00 |
| 8. | புதுக்கோட்டை | 9 | 1372.04 | – | – |
| 9. | தஞ்சாவூர் | 28 | 10850.37 | – | – |
| 10. | திருவாரூர் | 7 | 3974.00 | – | – |
| 11. | நாகப்பட்டினம் | 20 | 8620.79 | – | – |
| 12. | பெரம்பலூர் | 1 | 385.53 | – | – |
| 13. | கோயம்புத்தூர் | 2 | 270 | 1 | 265.00 |
| 14. | ஈரோடு | 9 | 3807 | 7 | 3442.13 |
| 15. | மதுரை | 13 | 4019.22 | 6 | 1950.31 |
| 16. | திண்டுக்கல் | 7 | 1705.1 | 2 | 317.39 |
| 17. | விருதுநகர் | 2 | 295.52 | 1 | 254.12 |
| 18. | சிவகங்கை | 2 | 136.85 | 1 | 136.05 |
| 19. | இராமநாதபுரம் | 3 | 1916.76 | 3 | 1916.76 |
| 20. | தேனி | 8 | 2135.34 | 2 | 671.19 |
| 21. | திருநெல்வேலி | 16 | 7828.74 | 4 | 1953.96 |
| 22. | தூத்துக்குடி | 9 | 3185.55 | 3 | 1178.77 |
| | **மொத்தம்** | **204** | **74356.49** | **36** | **14169.01** |

## 10.0. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாற்றத்தை தழுவல் திட்டம்

காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல் தழுவல் திட்டம் ரூ.1,560 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிப் பங்கு ரூ.1,092 கோடி மற்றும் மாநிலத்தின் பங்கு ரூ.468 கோடி ஆகும். இத்திட்டத்தில், கடைமடை மதகுகளை கட்டுதல், அனைத்து கடைமடை மதகுகளை புனரமைத்தல் / மறு கட்டுமானம் செய்தல் மற்றும் வடிகால்களை தேவையான தூரத்திற்கு அகலப்படுத்தி, தூர்வாரி உரிய தரத்திற்கு மேம்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள வெண்ணாறு உபவடிநில அமைப்பிலுள்ள ஆறுகள் / வடிகால்களான அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் உப்பனாறு வடிகால் மற்றும் 13 நீரேற்றும் திட்டப் பணிகளை செயல்படுத்திட ரூ.960.66 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. மேலும், திட்ட மேலாண்மைப் பிரிவு அமைத்தல், திட்ட செயலாக்கப் பிரிவுகள் அமைத்தல், சுற்றுச்சூழல் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் பெறுதல், சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் மறுகுடியமர்வு தொடர்பாக ஆலோசகர் நியமனம் ஆகிய பணிகளும் ரூ.164.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 11.0. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு

தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைப்பதற்காக புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து 2,765 மி.க.அடி உபரி நீரினை உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் 56,908.8 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் 33,298.07 ஏக்கர் நிலங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 23,610.73 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

மத்திய அரசின் வறட்சிப் பகுதி மேம்பாட்டிற்கான விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (AIBP) கீழ் நிதியுதவியை எதிர்நோக்கி, இத்திட்டத்திற்கு 369 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. வெள்ளநீர்க் கால்வாயின் திருத்திய நீளமானது, திருநெல்வேலி மாவட்டத்தில் 62.225 கிலோ மீட்டரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 12.95 கிலோ மீட்டரும் ஆகும்.

13.04.2017 அன்று இத்திட்டத்தின் நிலை I, II பணிகள் மற்றும் நிலை I முதல் IV வரை நில ஆர்ஜிதப் பணிகள் உட்பட, திருத்திய நிர்வாக ஒப்புதல் (பகுதி) ரூ.543.32 கோடிக்கு வழங்கப்பட்டது.

நிலை–I–இல் 18 தொகுப்பு பணிகளில், 12 தொகுப்புகள் நிறைவடைந்தும், 6 தொகுப்புகளில் பணிகள் முன்னேற்றத்திலும், நிலை–II–இல் 18 தொகுப்பு பணிகளில், 12 தொகுப்புகள் நிறைவடைந்தும், 6 தொகுப்புகளில் பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன.

மேலும், இத்திட்டத்தின் நிலை– III–இல் பணிகளுக்கு ரூ.216.37 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் 28.08.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.02.2019 அன்று நிலை–III பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். அதன்படி பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

நிலை IV – இல் உள்ள பணிகளுக்கு, நிலஅளவை பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மத்திய அரசின் பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY) – விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (AIBP) கீழ் செயல்படுத்துவதற்கான கருத்துரு மத்திய அரசின் நிதியுதவி பெற மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் அரசு மேற்கண்ட பணியை முடிப்பதற்காகவும் மற்றும் பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியுதவி பெறவும் 31.12.2020 வரை கால நீட்டிப்பு வேண்டி மத்திய அரசின் நீர்வள ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைத்தல் அமைச்சகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக மத்திய அரசு சில கூடுதல் விவரங்கள் மற்றும் அறிக்கைகளை கோரியுள்ளது. அவற்றை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2018–19–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.498.82 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

## 12.0. அணைகள் மற்றும் நீர் நிலைகளைத் தூர்வாருதல்

### 12.1. வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர், அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் திருவைகுண்டம் அணைக்கட்டினை தூர்வாருதல்

4 நீர்த்தேக்கங்கள் மற்றும் 1 அணைக்கட்டிற்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் விரைவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் பணி ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வைகை, அமராவதி, பேச்சிப்பாறை மற்றும் மேட்டூர் நீர்த்தேக்கங்கள் மற்றும் திருவைகுண்டம் அணைக்கட்டு ஆகியவற்றை தூர்வாரும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர் மற்றும் அமராவதி நீர்த்தேக்கங்களுக்கான துரித சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

தேனி மாவட்டத்தில் உள்ள வைகை நீர்த்தேக்கத்தை தூர்வாரும் பணிக்கான ரூ.211.76 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள ரூ.9.00 கோடி மதிப்பீட்டிலான மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தை தூர்வாரும் பணிக்கான ரூ.95.60 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள ரூ.5.12 கோடி மதிப்பீட்டிலான மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்தை தூர்வாரும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி நீர்த்தேக்கத்தை தூர்வாரி ரூ.172.81 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள ரூ.7.30 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி திருவைகுண்டம் அணைக்கட்டின் முழுகொள்ளளவினை மீளப்பெற ரூ.5.93 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்பாணையினை எதிர்நோக்கி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### 12.2. பரப்பலாறு நீர்த்தேக்கத்தினை தூர்வாருதல்

பரப்பலாறு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவினை மீட்டெடுக்கும் பொருட்டு தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியில், நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கும், நீர்பரப்பு பகுதியில் எல்லைக் கற்களை நடவும், இரண்டாம் கட்ட அனுமதியை பெறவும் ரூ.66.96 இலட்சத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட அனுமதியை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் வழங்கியுள்ளது. ரூ.7.849 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1.1925 கோடி மதிப்பீட்டிலான தூர்வாரும் பணிக்கான மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

### 12.3. வீராணம் ஏரியைத் தூர்வாருதல்

1,465 மில்லியன் கனஅடி அளவிலான வீராணம் ஏரியினை தூர்வாரி அதன் முழு கொள்ளளவினை மீளப்பெறும் பணி மற்றும் வடவாறு வாய்க்காலினை புனரமைத்தல் மற்றும் அதன் நீர்கடத்தும் திறனை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 12.4 சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளை தூர்வாருதல்

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டத்திலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியினை ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்திலுள்ள சோழவரம் ஏரி, பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம் மற்றும் மாதவரம் வட்டத்திலுள்ள செங்குன்றம் (புழல்) ஏரிகளை முறையே ரூ.5.43 கோடி ரூ.10.98 கோடி மற்றும் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் மேற்கண்ட ஏரிகளை தூர்வாருவதன் மூலம் 1.904 டி.எம்.சி அடி கொள்ளளவினை மீட்டெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 12.5. அணைகள் / நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவு ஆய்வு

2018–2019–ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 13 நீர்த்தேக்கங்கள் / அணைகளில் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (DRIP) வண்டல் மண் படிவு ஆய்வு பணிகள் ரூ.0.60 கோடி செலவில் நிறைவடைந்துள்ளன:–

1. மேல் ஆழியாறு அணை (கோயம்புத்தூர் மாவட்டம்)
2. கெலவரப்பள்ளி அணை (கிருஷ்ணகிரி மாவட்டம்)
3. சித்தமல்லி அணை (அரியலூர் மாவட்டம்)
4. உப்பாறு அணை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
5. பொன்னனியாறு அணை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
6. சித்தாறு– II அணை (கன்னியாகுமரி மாவட்டம்)
7. மோர்தானா அணை (வேலூர் மாவட்டம்)
8. மருதாநதி அணை (திண்டுக்கல் மாவட்டம்)
9. சூளகிரி சின்னாறு அணை (கிருஷ்ணகிரி மாவட்டம்)
10. அவலாஞ்சி அணை (நீலகிரி மாவட்டம்)
11. எமரால்டு அணை (நீலகிரி மாவட்டம்)
12. முக்கூர்த்தி அணை (நீலகிரி மாவட்டம்)
13. திருமூர்த்தி அணை (திருப்பூர் மாவட்டம்)

## 13.0. ஆய்வில் உள்ள திட்டங்கள்

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்திலுள்ள மணியாச்சிப்பள்ளம் ஓடையின் வெள்ள நீரினை வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திற்கு திருப்ப ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் விரிவான ஆய்வு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தொட்டமாந்துறையில் சண்முகாநதி நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சுருளியாற்றின் உபரி நீரை திருப்ப ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் விரிவான ஆய்வு மற்றும் மட்ட அளவைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி தேவம்பாடிவலசு கிராமத்தில் உள்ள பெரிய ஏரிக்கு கிருஷ்ணா ஏரியின் உபரி நீரை திருப்பும் திட்டத்திற்கான மட்ட அளவுகள் மற்றும் நிலஅளவுகள் எடுக்கும் பணிகள் ரூ.0.96 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அமராவதி ஆறு, சண்முகா நதி, வரதமாநதி, நல்லதங்காள் ஓடை மற்றும் நங்காஞ்சியார் ஆற்றை இணைக்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வு பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வி.கே.புரம் கிராமத்தில் கோரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூ.0.24 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், சின்னாற்றின் குறுக்கே சீக்கலப்பள்ளி கிராமத்தில் வாணிஒட்டு அருகே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கான நிலஅளவை மற்றும் மட்டஅளவை தயாரிக்கும் பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பாரூர் கிழக்கு பிரதான கால்வாயின் தொலைகல் 15.95 கி.மீ–லிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்து, ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி வட்டங்களில் உள்ள 33 ஏரிகளுக்கு பாசன வசதி வழங்கும் பொருட்டு முதற்கட்ட விரிவான ஆய்வுப் பணிகள் மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் ஆலங்குளம் வட்டங்களில், ஜம்புநதி அமைப்பின் மூலம் பாசனப் பயன்பெறும் பகுதிகளுக்கு, இராமநதியின் மிகை நீரினை திருப்பி விடுவதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள், நிலஅளவை மற்றும் மட்டஅளவை தயாரிக்கும் பணிகள் ரூ.42.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெண்ணையாற்றின் வெள்ள நீரைத் திருப்புவதற்காக வறட்சி பாதித்தப் பகுதிகள் பயனடையும் வகையில் தற்போதுள்ள எண்ணேகொள் அணைக்கட்டின் இடது மற்றும் வலது புறத்தில் புதிய கால்வாய் அமைக்கும் பணிக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.72.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்திலுள்ள எர்ணஹள்ளி, புலிக்கரை ஏரி மற்றும் 12 ஏரிகளுக்கு, சின்னாற்றின் உபரி நீரினை ஜெர்தலாவ் வாய்க்காலில் தொலைகல் 5.00 கி.மீ.–லிருந்து புதிய வழங்கு வாய்க்கால் அமைத்து நீர் வழங்கும் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

தென்பெண்ணையாற்றின் உபரி நீரினை அலியாளம் வலது பிரதான கால்வாய் வாயிலாக திருப்பி, தொலைகல் 8.80 கி.மீ—லிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்து, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி மற்றும் தருமபுரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டத்தில் சாத்தியமுள்ள 12 ஏரிகள் மற்றும் துள்செட்டி ஏரிக்கு நீர் வழங்கும் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.15.54 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தின் அருகில் பொன்னி ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகள் நிலஅளவை மற்றும் மட்டஅளவை தயாரிக்கும் பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

வேலூர் மாவட்டத்திலுள்ள பெண்ணையாற்றில் வரும் வெள்ள நீரில் 3.5 டி.எம்.சி அடி நீரினை அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மாதங்களில், பாலாற்றுக்கு திருப்பி வாணியம்பாடி வட்டத்தில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மூலம் 23,465 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுவதற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் பணியினை கலந்தறிவாளர் (Consultant) நியமனம் மூலமாக ரூ.0.67 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 14.0. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் (IMTI)

திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஆகும். இப்பயிற்சி நிலையம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இப்பயிற்சி நிலையம் 1984 முதல் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

கடந்த நிதியாண்டில் (2018—2019) அடிப்படை புவிசார் தொழில்நுட்பம், மேம்பட்ட புவிசார் தொழில்நுட்பம், மண்—நீர் மதிப்பீட்டுக் கருவி (மென்பொருள்), பாசனநீர் மேலாண்மை, வேளாண்—வானவியல், வானிலை எதிர்வுகூறல், நீர்வள மேலாண்மை மற்றும் ஆற்றுப்படுகை திட்டமிடல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், அக்குவா கிராப்மென்பொருள், டோட்டல் ஸ்டேஷன் அளவியல், நீர்வள ஆதாரத்துறையில் காலநிலை மாற்றம் மற்றும் மட்டுப்படுத்தும் உத்திகள், சூழலியல், திறனளவிடல் பயிற்சி, அணைப் பாதுகாப்பு மற்றும் கருவிகள், வெள்ளம் மற்றும் வறட்சி மேலாண்மை,

நீர்த்தேக்க இயக்கம், SWDES மென்பொருளிலிருந்து SWIS மென்பொருளுக்கு தரவு நகர்த்தல், சட்டசிக்கல்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005, நீர் சேமிப்பு உத்திகள், ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் மற்றும் திட்ட மேலாண்மை (MS-Project மென்பொருள் ) குறித்த பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டன. மேலும், 2016–ஆம் ஆண்டு, நீர்வள ஆதாதரத்துறையில் பணியமர்த்தப்பட்ட உதவி பொறியாளர்களுக்கான முதல் கட்ட அறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம் போலாவரம், கோதாவரி–கிருஷ்ணா நதிகள் இணைப்பு தொழில்நுட்ப ஆய்வுப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், குஜராத் மாநிலத்தில் தொழில்நுட்ப ஆய்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் (TN IAMP) கீழ் 2 பயிற்சிகள் நடத்தப்பட்டன.

விவசாயிகளுக்கு ஆசியவளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நவீன வேளாண் உத்திகள் குறித்து பயிற்சியும், அட்மா (ATMA) நிதியுதவியுடன் நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டு, ஒருநாள் களப் பயிற்சிக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். நீர்வள ஆதாரத்துறை களப்பணியாளர்களுக்கு திருவாரூரிலுள்ள செயற்திட்டப்பிரிவில் ‘‘திறன் வளர்’’ பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கடந்த நிதியாண்டில் 88 பயிற்சிகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 1,340 அலுவலர்கள், 1,422 உழவர்கள் மற்றும் 644 மாணவர்கள் பயன் பெற்றனர்.

## 15.0. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம் (SG & SWRDC)

வருவாய் குறுவட்டங்களின் அடிப்படையில் நுண்ணிய அளவில் மேற்கொள்ளப்பட்ட நிலத்தடி நீர் குறித்த மதிப்பீட்டிற்கு 01.10.2018 அன்று அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள 1,139 குறுவட்டங்கள் 5 வகைகளாக வகுக்கப்பட்டு, 358 அதிநுகர்வு, 105 மிகவும் அபாயகரம், 212 மித அபாயகரம், 35 உவர்நீர் மற்றும் 429 பாதுகாப்பான குறுவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் கடல் நீர் – நிலத்தடி நீர் கலக்கும் பகுதிகளை மதிப்பிடுவதற்காக நிலத்தடி நீர் மட்டம் மாதந்தோறும் கணக்கிடப்பட்டு 284 ஆய்வுக்

கிணறுகளிலிருந்து நீர் மாதிரிகள் ஆண்டிற்கு இருமுறை சேகரிக்கப்பட்டு, புவிவேதியியல் ஆய்வகங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன.

புவியியல், புவியமைப்பியல் மற்றும் புவிநீரியல் அளவீடுகள் மாதந்தோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விவரங்களைக் கொண்டு நீர்த்தாங்கிகளின் எல்லைகளை வரையறுக்கும் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்றன. மிகத்துல்லியமான நிலத்தடி நீர் தகவல்களை பெறும்பொருட்டு, மின்னிலக்க நீர்மட்ட பதிவுக் கருவிகளைப் பொருத்த மாநில அளவில் **386** இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய நீரியல் திட்டத்தின் கீழ், பொறியாளர்கள் மற்றும் புவியியலாளர்களின் திறனை மேம்படுத்த பல்வேறு புலம் சார்ந்த பயிற்சிகள் நடத்தப்பட்டன. சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூரில் காணொளி காட்சி மூலம் கலந்துரையாடல் செய்வதற்குரிய அமைப்புகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை, தஞ்சாவூர் மற்றும் மதுரையில் உள்ள **3** ஆய்வகங்களில் நீரின் தர ஆய்விற்கான ஆய்வக கருவிகள் கொள்முதல் செய்தல் மற்றும் நிலத்தடி நீர் நிகழ்நேர தகவல் சேகரித்தல் அமைப்புகளை நிறுவுதல் போன்ற பணிகள் ரூ.**6.39** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 16.0. நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம் (IWSH&QC)

பாம்பார் கோட்டக்கரையாறு ஆற்றுப்படுகைக்கான நுண்ணிய அளவிலான மறு ஆய்வுப் பணிகள் **2018–2019**–இல் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த ஆய்விற்காக செயற்கை கோள் வரைபடம் மற்றும் வான்வெளி புகைப்படத்தின் மூலம் வடிநிலத்தின் நிலப்பரப்பின் தன்மைகள் மதிப்பீடு செய்யப்பட்டது. நீர்வள ஆதாரத் துறையின் களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து ஏற்கனவே உருவாக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை ஏரிகள் குறித்த புவி சார்பு விவரத் தொகுப்பினை சரிப்பார்க்கும் பணி முடிவுற்று உரிய களப்பணி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டது. தகவல் தொழில்நுட்ப துறையின் கீழ் இயங்கும் ‘‘தமிழ்நாடு புவித் தகவல் அமைப்பு’’ நடைமுறைப்படுத்தும் புவிசார் தகவல் தொழிற்நுட்பம் தொடர்பான பணிகள் பிற துறைகளுடன் சேர்ந்து ஒருங்கிணைந்து மேற்கொள்வது தொடரப்பட்டது. பாசன கட்டமைப்புகளான அணைக்கட்டுகள், தடுப்பணைகள், கதவணை மற்றும் நிலத்தடி தடுப்புச் சுவர்கள் ஆகியவற்றின் விவரங்களை உரிய கள அலுவலர்களிடமிருந்து

சேகரித்து அதற்கு தனிகுறியீடு வழங்கி புவிசார் தகவல் தொகுப்பு உருவாக்கும் பணி தொடரப்பட்டது. நீர்வள ஆதாரத் துறை மற்றும் அதன் வெளி நிதி ஆதாரம் பெறும் திட்டங்கள் முதலியவற்றின் தொலையுணர்வு மற்றும் புவி தகவல் அமைப்பு தொழில் நுட்ப தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தில் **66** உப படுகைகளுக்கு மண், புவியியல், புவிப்புறவியல், வடிகால், நில பயன்பாடு, நிர்வாக எல்லை போன்ற கருத்துரு வரைபடங்கள் தயார் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டது. காவேரி, சென்னை, பரவனாறு மற்றும் வராகநதி படுகைகளிலிருந்து மழைக்காலங்களின் உபரி நீரினை சேகரிக்க தகுந்த இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, தலைவர், நீர்வள ஆதார மேம்பாட்டுக் குழுமம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

## 17.0. மணல் குவாரி

அரசாணை (நிலை) எண்.**451**, பொதுப்பணித்துறை, நாள் **03.10.2003**–இன்படி அனைத்து ஆற்று படுகைகளிலும் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதாரத் துறை மூலம் மணல் குவாரிகளை இயக்க அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.**325**, பொதுப்பணி (சி.பா**2**) துறை, நாள் **21.12.2013**–இல் வரிகள் மற்றும் ஏற்றுக்கூலி நீங்கலாக மணல் விலை ஒரு லோடு / **2** யூனிட் ரூபாய் **800/–** என நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசு மணல் விற்பனை கிடங்குகளில் விற்பனை செய்யும் நிகழ்வுகளில் ஆறு மற்றும் கிடங்கில் ஏற்றும் கட்டணம், ஆற்றிலிருந்து கிடங்கிற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து கட்டணம், கிடங்கு அமைந்துள்ள இடவாடகை மற்றும் கிடங்கு வாடகை மற்றும் கிடங்கு பராமரிப்பு கட்டணங்கள் விற்பனை விலைக்கு மேலாக வசூலிக்கப்பட வேண்டும் என்றும் அரசாணை நிலை எண்.**135**, பொதுப்பணி (சிபா.**2**) துறை / நாள்.**13.06.2017** ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் உபயோகிப்பாளர்களுக்கு எளிதில் கிடைத்திட ஏதுவாக ''தமிழ்நாடு மணல் இணைய சேவை'' (www.tnsand.in) என்ற இணையதளம் மற்றும் ''tnsand'' என்ற செல்லிடப்பேசி செயலி துவக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது மணலை இணையதளத்தில் முன்பதிவு செய்து

கொள்ளவும், இணையதளம் வழியாக மணல் விற்பனைத் தொகையை செலுத்தும் வசதியும் செயல்பாட்டில் உள்ளது.

சென்னை, விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டங்களால், தமிழ்நாடு முழுவதும் மணல் குவாரிகள் இயக்கப்படுகின்றன.

அனைத்து குவாரிகள் மற்றும் விற்பனை கிடங்குகளில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் மூலம் திட்ட இயக்குநரகம், சென்னையில் இயங்கும் கட்டுப்பாடு அறையில் கண்காணிக்கப்படுகிறது. பொதுமக்களின் குறைபாடுகளைத் தீர்க்க வலுவான நுகர்வோர் குறைதீர்ப்பு மையம் இயக்குநரகத்தின் கட்டுப்பாடு அறையில் இயங்கி வருகின்றது.

2018–19–ஆம் ஆண்டில் மணல் விற்பனை மூலம் அரசுக்கு ரூ.27.35 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**இறக்குமதி செய்யப்படும் மணல்**

அரசாணை (நிலை) எண்.242 பொதுப்பணித், (சிபா.2) துறை, நாள் 08.12.2017–இல் தமிழ்நாட்டில் கட்டுமான பணிகளுக்காக பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் அல்லது பிற மாநிலங்கள்/ஒன்றிய பகுதிகளிலிருந்து பெறப்படும் மணலினை சேமித்தல் மற்றும் விற்பனை செய்வதற்கான உரிமை தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூலம் செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு சிறுகனிமங்கள் சலுகை விதி 1959–இல் தொழில் துறையால் உரிய திருத்தம் செய்யப்பட்டு புதிதாக 'விதி 38D' சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகம், அதானி குழுமத்தின் காட்டுப் பள்ளி துறைமுகம் மற்றும் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம் ஆகியவற்றின் வழியாக மாதம் ஒன்றுக்கு சுமார் 5 லட்சம் மெட்ரிக் டன் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு கட்டுமானப் பணிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து இயற்கை ஆற்று மணலை தேசிய அளவிலான ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் இறக்குமதி செய்வதற்கு அரசாணை (நிலை) எண்.55, பொதுப்பணித் (சிபா2) துறை, நாள் 27.02.2018 –இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் இயற்கை ஆற்றுமணல் இணையவழி பதிவு மூலம் துறைமுகங்களிலிருந்து நுகர்வோருக்கு அக்டோபர் 2018–முதல் பொதுப்பணித்துறையின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## 18.0. கொதிகலன்கள் இயக்ககம்

தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் கொதிகலன்கள் நிறுவப்பட்டதின் பேரில், பொதுமக்களின் உயிர் சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படாதவண்ணம், கொதிகலன்கள் சட்டம், 1923–ல் வகுக்கப்பட்டுள்ள பல்வேறு விதிகளை நடைமுறைப்படுத்துவதே இக்கொதிகலன்கள் இயக்கத்தின் உரிய பணியாகும்.

மேற்கூறியபடி, கடந்த 2018–2019–ஆம் ஆண்டில், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950–ன் படி பல்வேறு விதமான கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பதற்கு மொத்தம் 2,710 வடிவமைப்பு வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 430 கொதிகலன்கள் தயாரிக்கப்பட்டு அதற்குண்டான தகவல் ஆவண கையேடு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 3,56,250 உயர் அழுத்த அடைப்பான்கள், 31,050 உயர் அழுத்த பெரிய குழாய் கட்டமைப்பு சாதனங்கள், பல்வேறு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட 3,150 சிறிய குழாய் கட்டமைப்பு சாதனங்கள் ஆகியவற்றிற்கு உற்பத்தி நிலையில் ஆய்வு மேற்கொண்டு, அவற்றின் தர உத்திரவாதத்திற்கு உரிய படிவத்தில் சான்றிதழ்களை இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950–இன் படி வழங்கியுள்ளது.

கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் உள்ள பற்றவைப்பாளர்கள் இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950–இன் படி கார்பன் மற்றும் அலாய் தகடு, குழாய் மற்றும் பழுப்பு ஆகியவற்றில் தேர்வு செய்து அதன் பேரில் 402 பற்றவைப்பாளர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சென்ற ஆண்டில் 552 புதிய கொதிகலன்கள் நீராவி இணைப்பு குழாய்களுடன் தொழிற்சாலைகளில் நிறுவுவதற்கு தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்குநரால் கொதிகலன்கள் சட்டம், 1923–இன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர சென்ற ஆண்டில் இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 5,412 கொதிகலன்களில், இந்நிறுவனத்தால் வருடாந்திர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 5,275 பல்வேறு தொழிற்சாலைகளில் உள்ள கொதிகலன்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2018–2019–ஆம் ஆண்டில் மொத்தம் 26 கொதிகலன்களுக்கு ஆய்வில் பழுதுகள் அறியப்பட்டு அதன் மீது பழுதுகள் மேற்கொள்ளும் பணியாக ஒப்பளிப்பு செய்து

அதற்குப் பின்னர் மீண்டும் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்வகத்தால் பல்வகை விதமாக அதாவது கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பு வரைபடங்கள் ஒப்புதல், கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிலையில் ஆய்வு செய்வதற்கான கட்டணங்கள் புதிய கொதிகலன்கள் நிறுவனம் மற்றும் பதிவு செய்வதற்கான கட்டணங்கள், பழைய கொதிகலன்கள் வருடாந்திர ஆய்வு செய்வதன் மூலம் ஆய்வு கட்டணங்கள், பற்றவைப்பாளர் தேர்வு நடத்துவதற்கான கட்டணங்கள், கொதிகலன்கள் இயக்கும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்வு கட்டணங்கள் வழியாக தமிழ்நாட்டிற்கு கணிசமான வருவாய் பெறப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில் இவ்வியக்ககத்தின் மொத்த வருவாய் ரூ.6.24 கோடி ஆகும்.

## 19.0. பன்மாநில நதிநீர் பிரச்சனைகள்

### 19.1. காவேரி நதிநீர்த் தாவா

காவேரி நதிநீர் தாவா குறித்து விசாரித்து வந்த காவேரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையை 5.2.2007அன்று பிறப்பித்தது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் சட்டப் போராட்டத்தினாலும், உச்சநீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19.2.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த இறுதி ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளில் 16.02.2018 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்துவதற்கு திட்டம் ஒன்றை 6 வார காலத்திற்குள் மத்திய அரசு வெளியிட வேண்டும் என இத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மத்திய அரசு அத்தகைய திட்டத்தை வெளியிடாத காரணத்தால், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தாக்கல் செய்தது. இந்த வழக்கில், மத்திய அரசு அளித்த வரைவு திட்டத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதனையடுத்து, மத்திய அரசு, 1.6.2018 அன்று காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்தது. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் செய்த பரிந்துரைகளின் அடிப்படையில், இவ்விரு அமைப்புகளுக்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். காவேரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரையில் 4 முறை கூடியுள்ளது. காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவின்

கூட்டம் 10 முறை நடைபெற்றுள்ளது. இக்கூட்டங்களில், தமிழ்நாட்டின் நிலைப்பாடுகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளன.

**19.2. முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை +152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பலப்படுத்தும் பணிகள்.**

முல்லைப் பெரியாறு அணை பிரச்சனையில், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளினால், உச்சநீதிமன்றம் 27.2.2006 அன்று அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடிக்கு தமிழ்நாடு உயர்த்திக்கொள்ளலாம் எனத் தீர்ப்பளித்தது. அதன்படி, தமிழ்நாடு எஞ்சியுள்ள பலப்படுத்தும் பணிகளை செய்து முடித்த பின்னர், தனிப்பட்ட நிபுணர்கள் அணையினை ஆய்வு செய்தவுடன், அணையின் உச்சமட்ட அளவான 152 அடிவரையில் நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம். கேரள அரசு இத்தீர்ப்பினை செயல்படுத்த இயலாத நிலையை உருவாக்கியதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகியதில், உச்சநீதிமன்றம் ஏற்கனவே 27.2.2006 அன்று வழங்கிய தீர்ப்பினை உறுதி செய்தது. இந்த தீர்ப்பின்படி, அனுமதிக்கப்பட்ட அளவான 142 அடி வரையில் மூன்று முறை அதாவது 21.11.2014, 7.12.2015 மற்றும் 15.8.2018 ஆகிய தேதிகளில் நீர் தேக்கிவைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு அணையின் முழு நீர்மட்டமான 152 அடிக்கு உயர்த்துவதற்காக செய்து முடிக்க வேண்டிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 7.85 கோடி ரூபாய் வழங்கி ஆணையிட்டது. இதில், பேபி அணையை பலப்படுத்தும் பணியை மட்டுமே முடிக்க வேண்டியுள்ளது. இப்பணியை மேற்கொள்வதற்காக மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்கு துறைகளின் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**எடப்பாடி கே. பழனிசாமி**
**முதலமைச்சர்**